# புலிகளின் பலம்பற்றி ‘றோ’வின் தவறான கணிப்பு;

# கல்கட் கண்டனம் - இந்திய இராணுவம் இனி தலையிடாது!

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 பங்குனி: 17 றம்மான் பிறை: 2 இதழ்: 46
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 30-03-1990

(புதுடில்லி)

இலங்கையில் தமிழீழவிடுதலைப் புலிகளின் பலம்பற்றி இந்திய புலனாய்வுநிறுவனம் ‘றோ’ மேற்கொண்டிருந்த பிழையான கணிப்பை இந்தியஅமைதிப்படைத்தளபதியாகவிருந்த லெப். ஜெனரல் ஏ. எஸ் கல்கட் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இந்தியப்படையின் கடைசி அணி திருமலையிலிருந்து புறப்பட்டு சென்னை வந்து அங்கி

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தின் 400 கடற்றொழிலாளர்களைக் காணவில்லையென அறிவிப்பு

[சென்னை]

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள பாக்கு நீரிணை கடற்பகுதியில் மீன் பிடிக்கச்சென்ற நானூறு தமிழக கடற்றொழிலாளர்கள் இனந் தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்துள்ளது,

கடந்த செவ்வாய்க்கிழமையன்று சிறுசிறு மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச்சென்றவர்களே இவ்வாறு கடத்தப் பட்டவர்களாவர்,

(8ம் பக்கம் பார்க்க)

# ★ தமிழ்பகுதிகளில்பாதிக்கப்பட்டோரைசந்திக்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு வடக்கு-கிழக்குவருகிறது!

(ஜெனீவா)

**இலங்கையில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை நேரில் அவதானிக்கும் பொருட்டு ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் குழு வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளுக்கும் விஜயமொன்றை மேற்கொண்டு ஜூன் மாத முற்பகுதியில் இலங்கை வரும்.**

வடக்கு-கிழக்கில் இந்திய படையினர் மேற்கொண்ட மனித உரிமைகள் மீறல் நடவடிக்கைகள் குறித்து முழு நிலைமையையும் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் விதத்தில் இப் பகுதிகளுக்கு இக்குழு விஜயம் செய்யும்.

இம்மாத முற்பகுதியில் ஜெனீவாவில் நடைபெற்ற ஐ. நா. மனித உரிமைகள் கழக மாநாட்டில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட

[8ம் பக்கம் பார்க்க)

## சமாதான சபைகள்

(திருமலை)

தமிழ்-சிங்கள முஸ்லீம் மக்கள் ஒன்றாக வாழுமிடங்களில் சமாதான சபைகள் அமைக்க

(8ம் பக்கம் பார்க்க

## தமிழீழ விடுதலை புலிகள்-ஜனாதிபதி சந்திப்பு ஏப்ரல் 4-ல் இடம்பெறும்? அரசு தரப்பில் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் – ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்குமிடையிலான முக்கிய சந்திப்பு ஏப்ரல் 4-ம் திகதி நடைபெறுமென கொழும்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பேச்சுக்களில் வடக்கு-கிழக்கு நிலைமை தொடர்பான பல முக்கிய விடயங்கள் குறித்தும் பேச்சுக்கள் நடைபெறும். மேற்படி பேச்சுக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் அண்மைக் காலங்களில் அமைச்சர் ஜனாப் ஹமீத், அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன மற்றும் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநருடன் நடாத்திய பேச்சுக்களின் அடிப்படையில் அமை

[8-ம் பக்கம் பார்க்க]

## இன்று புதிய அமைச்சரவை அறிவிக்கப்படலாம்?

(கொழும்பு)

புதிய அமைச்சரவைப் பட்டியல் எதிர்பார்த்ததுபோல் நேற்று அறிவிக்கப்படவில்லை.

புதிய அமைச்சரவை நியமனத்தில் ஏற்பட்ட தடங்கல் காரணமாகவே நேற்று அறி

(8-ம் பக்கம் பார்க்க)

## ஓரிஸா அகதிகளை தமிழகத்திற்கு மாற்ற பத்மநாபா முயற்சி!

[புதுடில்லி]

ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் திரு. க.பத்மநாபா, முன்னாள் மாகாண அமைச்சர் திரு ஜோர்ஜ் செனவிரத்தின ஆகியோர் புதுடில்லியில் இந்திய அரசாங்கபிரதிநிதிகளைச் சந்தித்து ஓரிஸாவிலுள்ள தமிழ்அகதிகளை தமிழகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கவுள்ளனர்.

புதுடில்லியில் இவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது உடனடியாகத் தெரிவிக்கப் படவில்லை.

விரைவில் இவர்கள் புதுடில்லியில் அரசாங்க பிரதிநிதிகளைச் சந்திக்கலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

அடுத்தவாரம் தமிழகமுதல்வர் திரு, மு. கருணாநிதியையும் இவர்கள் சந்திப்பதற்கு முயற்சி செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [து]

## ஓரிஸாவிலுள்ள தமிழ் அகதிகள் இலங்கை வருவார்கள்

[புதுடில்லி]

ஓரிஸாவிலுள்ள தமிழ் அகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்களென இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

ராஜ்ய சபாவில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில்இவ்வாறுதெரிவித்தார் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஓரிஸா தமிழ் அகதிகளின் சகல நிலைமைகளையும் இந்திய மத்திய அரசே தற்போது பொறுப்பெடுத்துள்ளது. அந்த மாநில அரசுக்கு ஏற்பட்ட நெருக்கடியை அடுத்தே மத்திய அரசு இந்நடவடிக்கையை மேற்கொண்டது. இவர்களும் தமிழகத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

## வல்வை இராணுவ முகாமிலுள்ள வீரர்கள் இன்று முற்றாக வெளியேறிவிடுவர்

(வடமராட்சி)

வல்வையிலுள்ள சிறிலங்கா இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினர் வெளியேறத் தொடங்கியுள்ளனர், இன்று அவர்கள் முற்றாக வெளியேறிவிடுவார்களென வல்வை சிறிலங்கா இராணுவ முகாமைச்சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பலாலி சிறிலங்கா இராணுவமுகாமில் தமிழீழ விடுதலைப்புலிகள் சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய பேச்சுவார்த்தையின் போது வல்வை இராணுவ முகாம் 48 மணித்தியாலத்திற்குள் அகற்றப்படும் என முடிவெடுக்கப்பட்டதுதெரிந்ததே.

இதன் அடிப்படையில்நேற்று வியாழக்கிழமை அதிகாலையில் சிறிலங்கா இராணுவத்தினர் ஒருபகுதியினர் மூட்டைமுடிச்சுகளுடன் நண்பகலுக்குமுன்பாக வெளியேறி வசாவிளான் இராணுவமுகாமை நோக்கிச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது

இதைத்தொடர்ந்து ஏனைய இராணுவத்தினரும் முற்றாக வெளியேறுவதற்கான ஆய

(8ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கும் அரச அதிகாரிகளுக்குமிடையில் எந்தவித தப்பபிப்பிராயமும் இல்லை ஹமீத்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தூதுக்குழுவினருக்கும், அரச சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்குமிடையே எவ்விததப்பபிப்பிராயம் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும், சரியான புரிந்துணர்வு தமக்கிடையேஏற்பட்டுள்ளது என்றும், வடக்கு கிழக்கு சமாதான சபையின் தலைவர் ஜனாப் ஏ. ஸி எஸ் ஹமீத் நேற்று முன்தினம் பலாலியில்நடைபெற்ற பேச்சுவார்த்தை குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்

இப்பேச்சுவார்த்தை மிகவும் சிநேகபூர்வமான முறையில் நடைபெற்றது என்றும் சகல பிரச்னைகளும் திருப்திகரமான முறையில் கலந்துபேசி தீர்க்கப் பட்டன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பின்வரும் விடயங்கள் குறித்து கருத்து ஒற்றுமை ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

★ இராணுவத்தினர் சோதனை முகாமகளை அகற்றுதல்.

(8-ம் பக்கம் பார்க்க)

## இ. போ. ச. பஸ்களில் புலிச்சின்னம்

((மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தற்சமயம் சேவையிலுள்ள இ. போ. ச. பஸ் வண்டிகளில் புலிச்சின்னம் மிகவும் அழகாகப் பொறிக்கப்பட்டுள்ளது

இ.சேவேலையில் தலை மன்னார் தொடங்கி, மடுறோட், மன்னார் எல்லை முடியுமவரை கொடிக்கம்பங்கள் மிகவும் பிரமாண்டமாக நிர்மாணிக்கப்பட்டு அதில் கம்பீரமாகபுலிக் கொடிகள் பறக்கவிடப் பட்டுள்ளன.

## வரி விளம்பரம்

### தேவை

வெற்று சீமெண்ட்பாக்குகள் தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (எ-648)

தையல் வேலையில் அனுபவமிக்க பெண்கள் தேவை நேரில்வரவும். திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும் என். வீரசிங்கம், 1009, துண்டிவீதி, சொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (சி-3666)

தேவன்ஸ் சீயாக்காய் பவுடர் மற்றும் தேவன்ஸ் தயாரிப்புகளை விற்பனைசெய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை. 'தேவன்ஸ்' விசுவலிங்கம், 139, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (சி-3660)

ஒரு சிறிய குடும்பம் வசிப்பதற்காக வீடு ஒன்று வாடகைக்கோ அல்லது விற்பனைக்கோ தேவை வீடு யாழ் நகர மையத்திலிருந்து ஒரு மைல் சுற்றுடலிலும், கண்ணியமான இடத்திலும், சகல வசதிகளுடனும் அமைந்திருத்தல் வேண்டும். தொடர்புகொள்ளவும். விளம்பர இல. C-3662, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-3662)

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய, பீற்றூட், கோவா, விதைகள் விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 3625)

### BILL CLERK

Wanted for well established Hardware Firm in Jaffna an experienced Bill Clerk. Apply with bio-data starting salary expected. Apply: C-3664, C/o Eelanadu, Jaffna. (C-3664)

## சந்தைப் பகுதி துர்நாற்றம்

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழைச் சந்தைப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதால் சுகாதாரத்துக்குப்பங்கம் உண்டாகும் நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

(7ம் பக்கம் பார்க்க)

## "பயிலுநர் ஆசிரியர்கள் பணத்திற்காக ரியூசன் கொடுக்கக் கூடாது"

(உடுவில்)

"பயிலுநர் ஆசிரியர்களாகப் பதவியேற்கும் நீங்கள் மாணவ உலகிற்குத் தனியார் பாடசாலைகளின் தேவை அவசியப்படாதவாறு கற்பித்தற் பணியைச் செய்யவேண்டும். பணத்துக்காக மாணவர்களுக்கு 'ரியூஷன்' கொடுக்கும் நிலை உங்களுக்கு இருக்கக்கூடாது".

இவ்வாறு பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெறவுள்ளவர்களுக்கான ஒரு நாள் சேவை முன் கருத்தரங்கை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய மருதனமடம் கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். கே. குலசேகரன் கூறினார்.

உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் உடுவில் - கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 152 பயிலுநர் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

கருத்தரங்கில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர் கே குலசேகரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:- "உள்ளூரில் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு லீவு எடுப்பதற்கான ஆத்மீகக் காரணங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. ஆசிரியர்கள் அடிக்கடி லீவு எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். மாணவரின் முன்னேற்றத்திலும் நலனிலும் அக்கறைகொண்டு வழிநடத்த வேண்டும். ஒவ்வொரு மாணவனதும் சுய விபரக் கோவைகள் தயாரிக்கப்பட்டு அவர்களது குறைபாடுகள் - முன்னேற்றங்கள்பற்றிய விபரம் பதியப்படல்வேண்டும். வாசிக்கும் பழக்கத்தைத் தூண்டி வகுப்பில் தினமும் வாசிப்புப் பாடத்தை நடத்தவேண்டும்" என்றார்.

பண்டத்தரிப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சிவானந்தன், யாழ் கல்வித் திணைக்கள முகாமைத்துவக் கல்வி அதிகாரி திரு. கே. தணிகாசலம்பிள்ளை, உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி செல்லையா, கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபரும், கொத்தணி அதிபருமான திரு. பஞ்சலிங்கம் ஆகியோரும் கருத்தரங்கில் பங்குபற்றிக் கருத்துரை வழங்கினர்.

## UNIVERSITY OF JAFFNA

## TENDER NOTICE

Tenders are invited for the conversion of ground floor Mathematics block as Computer Laboratory from contractors registered with University of Jaffna for Civil Engineering works for Rs.1,000,000/- and over.

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 4-4-90, 6-4-90 on producing a receipt from Bursar, University of Jaffna on payment of:

Non-refundable: Rs. 500/-

Refundable: Rs. 2, 500/-

Perfected tenders should be sent to reach the Registrar, University of Jaffna on or before 23-4-1990 at 10-00 a. m.

Tender board, University of Jaffna reserves the right to reject any tender.

**Registrar.**

University of Jaffna,
Jaffna. (A-647)

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஆரம்ப முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளது 9-ம் ஆண்டு குருபூசை ஏப்ரல் 4-ம் திகதி விசேட பூசையுடன் ஆரம்ப

(7ம் பக்கம் பார்க்க)

## பம்பாய் வெங்காய விதை வழங்க ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கம் பம்பாய் வெங்காயச் செய்கையில் ஈடுபட விரும்பும் விவசாயிகளுக்கு பம்பாய் வெங்காய விதைகளை பெற்றுக்கொடுப்ப

(7ம் பக்கம் பார்க்க)

## பனை அபிவிருத்திச் சபை

### கைதடி பனைவள ஆராய்ச்சி நிலையம்

80'-0'' X 50'-0'' விஸ்தீரணமும் இரு மாடிகளைக் கொண்டதுமான இக்கட்டடத்திற்கு 3 PHASE மின் இணைப்பு வேலை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இவ்வேலைக்குத் தேவையான சகலவிதமான மின் இணைப்பு உபகரணங்களும் சபையால் வழங்கப்படும். குறிப்பிட்ட மின் இணைப்பு வேலையை மேற்கொள்ளப் பதிவுசெய்யப்பட்ட மின் நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. தேவையான விபரங்களை எமது தலைமை அலுவலகத்திலும், கைதடி கண்டி வீதியில் அமைந்துள்ள இக்கட்டடத்தை நேரில் பார்த்தும் தங்கள் கூறுவிலைகளை வழங்கலாம். கூறுவிலைகளை மூடிய தபால் உறையில் தலைவர், பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலகம், கச்சேரி, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 12-04-90க்குப் பிந்தாமல் அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கைதடி மின் இணைப்பு வேலைக்கான கூறுவிலை" எனக் குறிப்பிடவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
பனை அபிவிருத்திச் சபை.

(ஏ-646)

## எமது இன்றைய புதிய வெளியீடுகள்

1. முரளி ★ கௌரி ★ செந்தில்
   "பாலம்" [ஒறிஜினல்]
2. அர்ஜுன் ★ ராதா ★ ராதாரவி
   "மனைவி ஒரு மாணிக்கம்" [ஒறிஜினல்]
3. S. S. ராஜேந்திரன் ★ விஜயகுமாரி
   "சாரதா" [ஒறிஜினல்]
4. TANGO & CASH (War)

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

(எ-650)

## A/L விஞ்ஞான மாணவர்கட்கு!

**91 அசேதன இரசாயனம்**
SAT. & SUN. 12-30 — 1-30
நாளை ஆரம்பம்:- 31 - 03 - 1990
ஆசிரியர்:- Mr. நாகரட்ணம் B.Sc.

**90 வட்ட இயக்கம்**
MON., WED. & FRI. 1-30— 3-00

**தொகையீட்டின் பிரயோகம்**
MON., WED. & FRI. 3-00 — 4-30
ஆரம்பம்:- 02 - 04 - 90

**Pure & App. [துரித மீட்டல்]**
TUE. & THU. 8-00 — 10-00
ஆரம்பம்:- 03 - 04 - 90
ஆசிரியர்:- Mr. கணேசன் B.Sc. (Hons)

**3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.**

(ஏ-639)

## மக்கள் வங்கி

## அடகு நகைகள் மீளளித்தல் கிளிநொச்சி மாவட்டம்.

பின்வரும் கிளைகளில் அடகு வைத்த நகைகளை மீளப்பெற்றுக்கொள்வதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள், கிளிநொச்சி தபால் நிலையத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பணக் கரும பீடத்தில் வைத்து, கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படும்.

| | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|
| 1. பரந்தன் கிளை (1989-09-27 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 1990-04-02 | திங்கள் |
| | 1990-04-03 | செவ்வாய் |
| 2. கிளிநொச்சிக் கிளை (1989-06-23 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 1990-04-04 | புதன் |

மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 1-00 வரை அடகு நகைகளை மீளப்பெற்றுக்கொள்ள முடியும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி இரசீது ஆகியவற்றுடன் சமுகந் தந்து நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்,

**பிராந்திய முகாமையாளர்.**
மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

(ஏ 644)

# ஆப்கானில் சோவியத் பயணிகள் விமானம் மீது கெரில்லாக்கள் ஏவுகணைத் தாக்குதல்

## விமானம் வெடித்துச் சிதறியது 40 பயணிகள் கருகி மரணம்

(காபூல்)

**ஆப்கான் தலைநகர் காபூலில் சோவியத் பயணிகள் விமானம் ஒன்றின் மீது கெரில்லாக்கள் மேற்கொண்ட தாக்குதலில் விமானம் வெடித்துச் சிதறியது. அதிலிருந்த பயணிகளில் நாற்பது பேர் கருகி மாண்டனர். 10 பேர் பலத்த எரிகாயங்களுடன் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

கெரில்லாக்களின் இந்தத் தாக்குதலை சோவியத்தும், ஆப்கான் அரசும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

காபூல் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும் சமயம் கெரில்லாக்கள் மேற்கொண்ட நான்கு ஏவுகணைத் தாக்குதல்களில் இரு ஏவுகணைகள் விமானத்தின் இறகுகளைப் பலமாகத் தாக்கி நொருங்கச் செய்ததால் விமானம் வெடித்துச் சிதறியது. அமெரிக்கா வழங்கிய தரையிலிருந்து வான் நோக்கித் தாக்கும் ஏவுகணையே இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் பத்து விமானிகள் உட்பட நாற்பதுபேர் கருகி மாண்டனர். தப்பியவர்களும் எரிகாயங்களுடன் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலான பயணிகள் ஆப்கானைச் சேர்ந்தவர்கள்.

ஆப்கானிலிருந்து சோவியத் படைகள் முற்ருக வெளியேறிய ஒரு வருடத்தின் பின் முதலாவதாக இப்பயணிகள் விமானம் கெரில்லாக்களின் தாக்குதலுககு இலக்காகியுள்ளது.

எனினும் மேற்படி விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக விபத்தில் சிக்கியிருக்கலாமெனச் சோவியத் அதிகாரி ஒருவர் கூறியதாக மாஸ்கோ வானொலி தெரிவித்தது. (சி)

## தீவுப்பகுதி சென். ஜோன் அம்புலன்ஸ் பட்டமளிப்பு விழா

(புங்குடுதீவு)

யாழ். மண்ணில் 1930ல் சென். ஜோன் அம்புலன்ஸ் படைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய காலத்தில் அதன் தேவைகள் ஏற்படவில்லை. 1983க்கும் 1989க்கும் இடைப்பட்ட காலத்தில் வடமராட்சிப் பகுதியில் ஏற்பட்ட வன் செயல்களின் அனர்த்தங்களால் ஷெல் தாக்குதல், விமானத்தாக்குதல் போன்றவற்ருல் பல இழப்புக்கள் தோன்றலாயின. அந்த நேரத்தில் எமது தொண்டர்கள மக்களை காப்பாற்றும் முயற்சிகளில் தங்களது சேவைகளை மிகத் துரிதமாக மேற்கொண்டார்கள்.

இவ்வாறு புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெற்ற தீவுப்பகுதி சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவின் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியிலும் நூல் வெளியீட்டு விழாவிலும் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வடமாகாண சென். ஜோன் அம்புலன்ஸ் படைப் பிரிவு ஆணையாளர் வைத்தியகலாநிதி திரு. சுகந்தன் இன்ஞசித்தம்பி குறிப்பிட்டார்.

புங்குடுதீவு சிறி சுப்பிரமணிய வித்தியாலயத்தில் அதிபர் செல்வி ம. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் வேலணை கோட்டக் கல்வி அதிகாரி திரு. சி. புலேந்திரன் தமது உரையில் கூறியதாவது:

தீவுப்பகுதியிலுள்ளவர்களை பார்த்து பின்தங்கியவர்கள் என்று கூறுகின்ருர்களே. ஆனல் அது தவருன கூற்ருகும். இங்குள்ளவர்கள் தான் பெரும் அறிவாளிகளாகவும், கல்விமான்களாகவும் பல்கலைக் கழகங்களில் கல்விபெற்றும் வருபவர்களாவர் என்ருர்.

(6ம் பக்கம் பார்க்க)

## மயக்கமுற்ற நோயாளிகளின் உடல் உறுப்புக்களைத் திருடி வைத்தியர்கள் விற்பனை பலர் கைது

(கிழக்கு பெர்லின்)

கிழக்கு ஜேர்மன் வைத்தியசாலைகளில் டாக்டர்கள் மேற்கொண்டுவந்த பல மனித உறுப்புத் திருட்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அங்கு பெரும் கொந்தளிப்புநிலை உருவாகியுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட டாக்டர்கள், நர்சுகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலைகளில் விபத்துப் பிரிவுகளில் அனுமதிக்கப்படுபவர்களின் இருதயம், ஈரல், சிறுநீரகங்களை, அவர்கள் மயக்கமுற்ற நிலையில்ருக்கும்போது டாக்டர்கள் சத்திரசிகிச்சை மூலம் அகற்றிவிடுவார்கள். மோசமான விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களின் இருதயத்தைச் சாதுரியமாக இவர்கள், உறவினர்களுக்குத் தெரியாமல் திருடிவிடுவார்கள்.

இவ்வாறு திருடப்படும் உறுப்புகளை, மேற்கு ஜெர்மனிக்கு ஹெலிகொப்டர்கள் மூலம் அனுப்பிவிடுவார்கள். இதற்காக இவர்களுக்குப் பல லட்சம் மார்க் வழங்கப்படும். கடந்த 4 மாதங்களில் இவ்வாறு 20 இருதயங்களும், 18,000ற்கும் மேற்பட்ட சிறுநீரகங்களும், 10,000 ஈரல்களும் அகற்றப்பட்டுக் கடத்தப்பட்டுள்ளன.

பெருமளவில் இளம் நோயாளிகளது உறுப்புக்களே இவ்வாறு அகற்றப்பட்டுக் கடத்தப்பட்டுள்ளன. இதற்கு டாக்டர்களும், நர்ஸுகளும் உதவி செய்துள்ளனர். இவர்களுக்கும் குறிப்பிட்ட தொகைப் பணம் இதற்காக வழங்கப்படும்.

மேற்படி அதிர்ச்சிமிகு கண்டுபிடிப்பை பத்திரிகை ஒன்றே கண்டுபிடித்து வெளியிட்டுள்ளது. இதையடுத்து பல டாக்டர்கள் தலைமறைவாகியுள்ளனர். பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பலரைத் தேடிப் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (சி)

## போதைப் பொருள் கடத்தலில் புதுவழி

(லண்டன்)

உலக நாடுகளில் போதை வஸ்துக் கடத்தல்காரர்கள் தற்போது அவற்றைத் தமது உடலினுள் எடுத்துக் கடத்தும் தந்திரோபாயத்தில் அதிகளவு ஈடுபடுவதாகப் பிரிட்டன் போதைவஸ்துக் கடத்தல் தடுப்புப் பிரிவுத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொதுவாகப் பல்வகைப் போதை வஸ்துக்களையும் அடைத்து, அவற்றை விழுங்கியோ அல்லது உடலின் சில பகுதிகளை வெட்டித் திறந்து, அதனுள் வைத்தோ அல்லது குதத துவாரத்தினுள் செருகியோ கடத்தலில் ஈடுபட்டுகிருர்கள்.

இவற்றைத் தடுக்கப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறுநீரகப் பரிசோதனை, குறைந்த கதிரியக்க எச்ஸ்றே பரிசோதனை மற்றும் ஒளியியக்கக் கருவிகள் மூலம் பெருமளவு கடத்தல்கள் முறியடிக்கப்படுகின்றன.

இவ்வாறு உடலினுள் இவற்றைக் கடத்திச் செல்லும் போது அந்தப் பைக்கற் வெடித்துப் பலர் இறப்பதும் தற்போது அதிகரித்துள்ளதாகவும் பணியகம் தெரிவித்துள்ளது. (சி)

## ஜம்மு சிறையிலிருந்து 12 கைதிகள் தப்பியோட்டம்!

### காஷ்மீரில் துணிகர சம்பவம்

(ஸ்ரீநகர்)

ஜம்மு – காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகர மத்திய சிறைச்சாலையிலிருந்து காஷ்மீர் தீவிரவாத முக்கிய தலைவர்கள் நால்வர் உட்பட 12 பேர் கடந்த செவ்வாய் இரவு தப்பியோடிவிட்டனர். இவர்களைத் தேடிப் படையினர் பெரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

காஷ்மீரில் இடம்பெற்று வரும் தீவிரவாதச் சம்பவங்கள் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுப் பலத்த காவலின் மத்தியில் வைக்கப்பட்ட இவர்கள் துணிகரமாகத் தப்பியது சிறைச்சாலை வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியைஏற்படுத்தியுள்ளது.

உணவு வேளையில் சாப்பாட்டுடன் காவல் அறைகளுக்குள் நுழைந்த சிறைக் காவலர்களைத் தாம் அணிந்திருந்த நீண்ட துப்பட்டிகளால் சுற்றி மடக்கிக் கட்டிப் போட்டுவிட்டு அவர்களது ஆயுதங்களையும் கைப்பற்றிக்கொண்டு இந்தத் தீவிரவாதக் கைதிகள் தப்பியோடியுள்ளனர்.

தப்பியோடும் வேளையில் எதிர்ப்பட்ட சிறைக் காவலர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டுள்ளனர். இதனுல் மூன்று காவலர்கள் பலத்த காயத்திற்குள்ளானுர்கள்.

இதேவேளை காஷ்மீரில் ஸ்திரமற்ற நிலையொன்றை ஏற்படுத்தி இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் குலைக்க பாகிஸ்தான் பலகோடி ரூபாய்களைத் தீவிரவாதிகளுக்கு வழங்கியுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் பலத்த குற்றச்சாட்டைத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் இச்செயலுக்கான விளைவை அது விரைவில் எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

## அணுகுண்டுத் தயாரிப்பில் ஈராக் மீண்டும் இறங்கும்

### அமெரிக்கா கண்டனம்

(பாக்தாத்)

ஈராக் மீண்டும் அணுகுண்டுத் தயாரிப்பில் ஈடுபட முடிவு செய்துள்ளது. இத்தயாரிப்பிற்கு உதவிசெய்யச் சீனவும், சவூதி அரேபியாவும் முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் ஈராக் அணுகுண்டுத் தயாரிப்பில் பல முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது. பாக்தாத்திலுள்ள அணுகுண்டுத் தொழிற்சாலையை 1982ம் ஆண்டு இஸ்ரேல் தாக்கிப் பெருமளவு சேதப்படுத்தியதாலும், ஈரானுடனை யுத்தத்தினுலும் இம் முயற்சி தொடர்ந்து தடைபட்டிருந்தது.

மீண்டும் அணுவாயுத ஏவுகணைகளையும், அணுகுண்டையும் தயாரிக்க ஈராக் பல நடவடிக்கைகளில் அண்மைக் காலமாக ஈடுபட்டுவருகிறது. இதற்குத் தேவைப்படும் 'யுரேனியத்தை' சீனவும், சவூதி அரேபியாவும் வழங்க முன்வந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கின் இந்த முயற்சியை அமெரிக்கா கண்டித்துள்ளதுடன் இதனைத் தடுக்கும் முயற்சியிலும் இறங்கியிருப்பதாகவும் ஊர்ஜிதமற்ற தகவல் ஒன்று தெரிவித்துள்ளது. இஸ்ரேல் இந்த முயற்சியைக் குழப்பலாமென்றும் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (சி)

## பாதுகாப்பு அலவன்ஸ் இல்லாவிடில் பாடசாலைகள் ஒருநாள் ஸ்தம்பிதமடையும்

(மருதங்கேணி)

எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு இடையில் ஆசிரியர்களுக்கும், ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 'பாதுகாப்பு அலவன்ஸ்' வழங்கப்படாவிடில் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் ஒருநாள் ஸ்தம்பிதமடையும்,

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் திரு. தா. மகாசிவம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களுக்கான 'பாதுகாப்பு அலவன்ஸ்' வழங்கப்படாமை குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்கனவே ஜனதிபதி அலுவலகம், கல்வி அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு ஆகியவற்றுடன் தொடர்புகொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (53)

### மணிவாக்கு

ஒருவன் தொழில் செய்யும் வகையை அறிந்து தன்னைப் பாதுகாத்துக்கொண்டால் பகைவர் செருக்குக் கெடும். — நீதிநூல்.

## நமது நோக்கு

# 'மட்டக்களப்புச்' சிந்தனை மலரவேண்டும் எங்கும்!

"நிவாரணம் வழங்குவது மாத்திரமல்ல, வேலை வாய்ப்பளிப்பதற்கான புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன; அரைகுறையாக விடப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன; இவையே எனது முக்கிய கடமையாக இருக்கும்!" —இவ்வாறு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் கூறியுள்ளார்.

சென்ற சில ஆண்டுகளாக மக்கள் பெரும் இழப்புக்களைச் சந்தித்துள்ளார்கள்; வீடுகள் புதுப்பிக்கப்படவேண்டும்; மீண்டும் புனர்வாழ்வு ஆரம்பிக்க வேண்டும். இவை அவசரப் பணிகள்; யாரும் மறுக்க மாட்டார்கள்.

ஆனால், இவை மாத்திரம்தான் அரசாங்கப் பணிகளா? அறிவிக்கப்பட்ட நிவாரணங்களைப் பெறுவதில், பாதிக்கப்பட்டவர்கள் பாதிக்கப்படாதவர்கள் என்ற பாகுபாடின்றிச் சகலரும் முண்டியடித்துக்கொண்டு தமது பெரும்பொழுதை இதிலேயே செலவுசெய்கிறார்கள்.

அவற்றிற்கான ஆவணங்களைப் பெறுவதிலும், சிபார்சுகளைப் பெறுவதிலும் கவனம் செல்கிறது. அரசாங்கக் காரியாலயங்களின் முழுநேரப் பணியும் இந்த நிவாரண வேலைக்கே போதாமல் இருக்கின்றது போல் தெரிகிறது.

இந்த நிவாரணப் பணிகட்கு அப்பாலும் மட்டக்களப்பு அரசாங்க அதிபரின் கவனம் சென்றது மாத்திரமல்ல, நிரந்தர வேலைகளுக்கான திட்டங்களின் முக்கியத்துவத்தையும் பலரது கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

பல லட்சங்களைச் செலவிட்டு ஆரம்பித்த திட்டங்கள் பல, வன்செயல்கள் காரணமாகத் தடைப்பட்டுள்ளன. அவற்றை மீண்டும் ஆரம்பித்துத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். போட்ட முதலீடுகள் பாழாவது தடுக்கப்படவேண்டும்.

உதாரணமாக, மட்டக்களப்பு மாவட்டத்திலே, தொடக்கப்பட்ட பல பணிகள் அப்படியே நின்றுவிட்டன. வாழைச்சேனை மீன்பிடித்துறை வேலைகள் தொடரப்பட்டால் பல மீனவக் குடும்பங்கள் வேலை வாய்ப்பைப் பெற்று நிவாரணங்களில் மாத்திரம் நம்பியிருக்கவேண்டிய அவலநிலை தொடரவேண்டியதில்லை.

இதேபோல, அரசாங்க அச்சகக் கிளை, நெல் சந்தைப்படுத்தும் சபையின் நெல் ஆலைத் தொகுதி, வேப்பவட்டுவான் ஓட்டுத்தொழிற்சாலை ஆகியவற்றின் வேலைகள் தொடரப்படவேண்டும்.

இவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து வேலைகளைத் தொடர அரசாங்க அதிபர் முன்வந்துள்ளார்.

இதைவிட வேலையற்றிருக்கும் மக்கள் பலருக்கு வேலைவாய்ப்பளிக்கக்கூடிய புதிய திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் உருவாக்கி கிடைக்கும் நிதிகளின் உச்சப் பயனை உறுதிசெய்யவும் அவர் கவனம் செலுத்த உள்ளார்.

இந்த 'மட்டக்களப்புச்' சிந்தனை எங்கும் பரவ வேண்டும். உடனடி நிவாரணங்களில் மாத்திரமல்லாது நீண்டகால அபிவிருத்தித் திட்டங்கள், வேலை வாய்ப்பைப் பெருக்கும் திட்டங்கள் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தப்படுவதன் அவசியத்தையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

## தவக்கால நற்சிந்தனை

"உன் அருகே இருக்கும் சகோதரனைவிட நீ நல்லவன் என உன்னை நீ ஏமாற்றாதே."

இன்று எதிலும் எல்லாம் நான் தான் உயர்ந்தவன் என எம்மையே நாமே உயர்வாகச் சிந்திப்பதால் தான் ஏனையவர்களின் சொல், செயல்களை மதிக்கத் தவறியவர்களாக, அவர்களும் எமது சகோதரர் என ஏற்றுக்கொள்ளாதவர்களாக வாழ முற்படுவதால் நாமும் மனித குலத்தை இழந்து, மனித மாண்பைப் புறக்கணித்து, மன அமைதி அற்ற நிலையில் அலைகிறோம். யேசுவினுடைய ஒப்பற்ற அன்பு வேண்டாம் என மறுத்து அகன்று செல்கின்றோம். நிழலைவிட்டு நெருப்பை உமிழும் பாலைவனத்தை நாடுகின்றோம். மனிதன் ஒன்று சேர்ந்து கூட்டுறவில் மலர்வது தானே சமுதாயம். தனி மனிதன் இதயத்தில் இறை அன்பு இல்லை எனில் சமுதாயத்தில் அவ்வன்பு மலர முடியாது.

பெற்ற அன்பிற்கு பிரதி அன்பு செய்யவேண்டும் என்பதுவே பண்பு. ஆண்டவர் தமக்களித்த தெய்வீக விசுவாச ஒளி, அவரது அன்பை விடாது நமக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றது. அந்த அன்பிற்கு பிரதி அன்பாக ஆண்டவர் நம்மிடம் கேட்பது மிகவும் சொற்பமாகும். நம் உதவியோ, நன்றி அறிதலே அவருக்கு அவசியமில்லை ஆனால் நம் நன்றி உணர்வைக் காட்ட, நம்மிடமுள்ள தெய்வீகக் கொடையாகிய விசுவாசத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று இத் தவக் காலத்தில் அவர் கேகின்றார். "நீங்கள் இலவசமாகப் பெற்றதை இலவசமாகக் கொடுங்கள்" என்று இந்நாளில் அறைகூவல் விடுக்கின்றார் கிறிஸ்து. நான் காட்டிய அன்பை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள நம் அனைவரையும் கேட்கின்றார்

அருட் சகோ.
ம. கிறேஷன்
C M S.F. சிலாபம்.

## மக்கள் கருத்து

### பரீட்சை இலாகா இதைக் கவனிக்குமா?

அண்மையில் நடைபெற்ற பயிற்சி ஆசிரியர் தெரிவில் சைவப் போதகர் பயிற்சியை முடித்தவர்களுக்கு சமய பாடத்திற்கு 200 புள்ளிகள் வழங்கப்பட்டதாகக் கரைச்சி சைவ வித்தியாவிருத்திச் சங்கத் தலைவர் திரு. க. துரைராசா தெரிவித்ததைத் தங்கள் 27.3 90 ஆந் திகதி வெளிவந்த பத்திரிகையில் வாசித்து அதிர்ச்சியுற்றேன். நானும் ஒரு சைவப்போதகர். குருகுலத்தால் நடாத்தப்பட்ட சைவசமயப் பாடப் போதகர் பயிற்சியை முடித்தவள் நான். பருத்தித்துறையில் நடைபெற்ற பயிற்சி ஆசிரியர் தெரிவில் எனக்குக் கிடைத்த புள்ளி 75. ஏனிந்தப் பாரபட்சம்? பரீட்சை இலாகா இதைக் கவனிக்குமா? உரிய நடவடிக்கை எடுக்குமா?

செல்வி பிரேமாவதி சுப்பிரமணியம்,
கரவெட்டி.

## பலதும் பத்தும்

### ஜேர்மனியில் தமிழ் மன்றம்

எமது பகுதிகளிலிருந்து, 'எப்படியோ' அகதிகளாகச் சென்று, தமிழர் ஐரோப்பிய நாடுகளில் அல்லற்படுகிறார்கள் அல்லவா?

உழைக்கவென்று சென்று, கலாசாரச் சீரழிவுகளுக்கு ஆளாகிப்போன பல கண்ணீர்க் கதைகளுக்கு மத்தியில் ஜேர்மன் நாட்டில் தமிழர் கலை, கலாசாரம் பேணத் தமிழ் மன்றம் அமைக்கப்பட்ட செய்தியும் கிடைத்திருக்கின்றது.

இந்த மன்றம் அங்குள்ள தமிழ்ச் சிறார்களின் தமிழ் மொழி அறிவை வளர்க்கச் சிறிய பாடசாலையை ஆரம்பித்துள்ளது. வாரத்தில் ஒரு நாள் வகுப்பு!

பரத நாட்டியத்திற்கும் வகுப்புண்டு. இயல், இசை, நாடக நிகழ்ச்சிகளும் இம் மன்றத்தால் நடாத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் மன்றத்தின் ஆண்டு மலரில் காணப்பட்ட ஒரு படம்-நடன அரங்கிலே அழகிய, பாரிய நடராஜர் சிலை!

தகுதி இருந்தும் இங்கு உயர்கல்வியைப் பெறமுடியாதவர்களுக்காக, "மேற்கு ஜேர்மனியில் பல்கலைக் கழகப் படிப்பை எப்படித் தொடர்வது?" என்ற வழிகாட்டிக் கைநூலையும் வெளியிட்டுள்ளார்கள்.

வாணி

# குரு லிங்க சங்கம வழிபாடு புத்துயிர் பெறவேண்டும்!

குரு லிங்க சங்கம வழிபாட்டை ஆகமங்கள் வலியுறுத்துகின்றன. கோவிலுக்குச் செல்லும் அடியார்கள் இதனை முற்றாக உணர்வதில்லை.

ஏனைய மதங்களில் குரு வழிபாடு முக்கியத்துவம் பெறுகிறது. 'மகாபொல' புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சியைத் தொலைக்காட்சியில் காட்டினார்கள். பரிசு பெற்றவர்கள் ஜனாதிபதியை வணங்கி பத்திரங்களைப் பெற்றார்கள். பௌத்த பிக்குகளான மாணுக்கர்கள் எப்படிப் பெற்றார்கள்? கதிரையிலே அமர்ந்திருந்தார்கள்; ஜனாதிபதியே சென்று வணங்கிப் பத்திரங்களைக் கையளித்தார்கள்.

ஓர் ஆலய முன்னேற்றத்திற்கும், ஆலயம் அமைந்துள்ள ஊர் செழிப்புறவும் ஊர் மக்கள் இறைவன் ஆசி பெறவும் அவ்வாலயப் பிரதம குருவின் பணி அவசியமானது

சைவக் குருமாரும் போதிய பயிற்சி பெற்று தம்மைப் பிறர் கௌரவிக்கும் வண்ணம் நடந்துகொள்ள வேண்டும்.

நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் கோவில் சரித்திரப் பிரசித்தி பெற்றது. குறுகிய காலத்தில் அது புனரமைக்கப்பட்டு மஹோற்சவம் நடைபெறுகின்றது. ஆலய தீர்த்தோற்சவத்தின்போது பிரதம குரு சிவஸ்ரீ ச. மகாலிங்க குருக்கள் கௌரவிக்கப்பட்டிருந்தார். இது ஓர் முன்மாதிரியான நிகழ்ச்சி.

(5-ம் பக்கம் பார்க்க)

## றமழான் சிந்தனை

# உணவு கொடுப்பதன் உயர்வு

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:-

"ஒருவர் பசித்தவருக்கு ஆகாரமும், ஆடை இல்லாதாருக்கு ஆடையும், வழிப்போக்கர்களுக்குத் தங்குமிடமும் தந்து உதவினால் இறைவன் மறுமையில் ஆபத்துகளிலிருந்து அம்மனிதரைக் காப்பான்"

"நீங்கள் வெள்ளை நிற ஆடையை அணியுங்கள். அது நிச்சயமாக மிகச் சுத்தமும், இன்பமுமுடையதாகும். உங்களுள் இறந்தவர்களையும் அவற்றால் கபன் செய்யுங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் அறிவுரை கூறினார்கள்.

"அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவராக யாராவது இருந்தால், அவர் தன் விருந்தாளியைச் சங்கை செய்து (மரியாதை) செய்யவும்" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

### இன்று கொடியேற்றம்

## திருநல்லை(சட்ட)நாதர்போற்றிப்பா

நீரேறு கங்கைசடை நிறைந்தாய் போற்றி
நிகரில்மறை யாகமமாய் நின்றாய் போற்றி
போரேறு கொண்டருளும் புனிதா போற்றி
புகலளவைக் கெட்டாது புகலே போற்றி
காரேறு கமழ்கொன்றை நயந்தாய் போற்றி
ககனமொடு நீர்நிலனாய்க் கலந்தாய் போற்றி
சீரேறு தினகரனாய்த் திகழ்வாய் போற்றி
திருநல்லை நாதரே போற்றி போற்றி.

—ச. தங்கமாமயிலோன்

# சமயத்தை விளங்க வேண்டாமா?

(1) கோயிற் கிரியைகளிற் காணும் கும்பம் எதனைக் குறிக்கிறது?

குடம் தசையாகின்றது. உள்ளே விடும்நீர் மேதஸ் ஆகின்றது. குடத்தைச் சுற்றி இருக்கும் நூல் எழுபத்திரண்டாயிரம் நாடி நரம்புகளைக் குறிக்கின்றது. உள்ளே போடப்படும் செப்பு நாணயங்கள் சுக்கிலமாகவும், தேங்காய் சிரசாகவும், கட்டப்படும் பட்டுத்துணி தோலாகவும், மாவிலைகள் சடையாகவும், தர்ப்பையினால் அமைந்தகூர்ச்சம் சிகையாகவும், ஓதிப்பதிக்கப்படும் மந்திரங்கள் ஜீவனாகவும் கருதப்படுகின்றன.

(2) "பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்த பிரான்"

—இதன் கதை என்ன?

வீட்டிலே பால் இல்லாமல் குழந்தை ஒன்று அழுதது. எதைக் கொடுத்தும் அழுகை தணியவில்லை. தந்தையார் கோவிலுக்கு எடுத்துச்சென்று சுவாமிமுன் கிடத்திவிட்டுப் பூக்கொய்யச் சென்றுவிட்டார்.

இறைவன் இரங்கினார்; திருப்பாற் கடலையே அழைத்து வேண்டிய பாலை குழந்தைக்குக் கொடுத்தார். அழுகை நின்றது; அருள் பெற்றது.

எப்போதும் சிவனையே நினைக்கும் மிகப்பெரிய முனிவரான உபமன்யுவே இவ்வாறு பால் பெற்று அருள்பெற்றவர்.

(3) யோகம் என்றால் என்ன?

உள்ளத்தால் இறைவனது அருவத் திருமேனியாகிய சிவம், சக்தி, நாதம், விந்து ஆகியவற்றை நோக்கிச் செய்யும் வழிபாட்டு முறையாகும். இங்கே அகக் கருவிகள் இறைவனுக்கு அர்ப்பிதஞ் செய்யப்படுகின்றது. உயிர் இறைவனோடு சேர்தல் என்பதைக்குறிக்கும் "சேர்க்கை" என்பதே யோகம் என்பதன் பொருளாகும். அந்தச் சேர்க்கையை அடைவதற்குரிய பயிற்சிகளையே அட்டாங்க யோகமாக வகுத்துள்ளார்கள். இது சகமார்க்கம் எனப்படும்.

தொகுப்பு;- சி. கலையரசி

## உங்கள் பிரச்சனை என்ன?

கேள்வி: நான் ஒரு ஆசிரியை. 55 வயது பூர்த்தியாவதால் சேவை நீடிப்பு பெற்றுள்ளேன். உறவினரைச் சந்திப்பதற்காக சிங்கப்பூர் செல்ல விரும்புகிறேன். எனக்கு வெளிநாடு செல்ல ஒரு மாதகால சம்பளமற்ற லீவு கிடைக்குமா?

—சண்டிலிப்பாய்

பதில்: சேவை நீடிப்புக் காலத்திலும் ஏனைய ஆசிரியர்களுக்குரிய விதிமுறைகள் பொருந்தும். எனவே சம்பளமற்ற லீவு பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களில் அதிபர் ஊடாக, விண்ணப்பிக்கவும். குறிப்பிட்ட கால எல்லைக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்.

(152)

# "மக்களுக்கு நீதி கிடைக்க இணக்க சபைகளை ஆரம்பிக்கிறேம்"

## - புலிகள் பொறுப்பாளர் அத்தார்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடந்த பதினெட்டு வருடகால போராட்டத்தின் ஒரு திருப்பு முனையாக அங்கீகாரம் பெற்ற ஒரு அரசியல் கட்சியாக விடுதலைப்புலிகள் இயக்கம் பதிவுசெய்யப்பட்டுள்ளது தொடர்ந்தும் எமது மக்களுக்காக உழைத்துக் (காண்டே வருகிறேம். மக்களுக்கு நீதி, கிடைக்க இணக்க சபைகளை ஆரம்பிக்கின்றேம்.

இவ்வாறு கிளிநொச்சிமேற்கு சமாதான சபையை வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் இயக்க கிளிநொச்சி மேற்கு பிரதேச பொறுப்பாளர் திரு. அத்தார் குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகள் இயக்கப் பொறுப்பாளர் திரு. அத்தார் மேலும் பேசுகையில் கூறியதாவது: எமது மக்களுக்கான சேவையில் தொடர்ந்து இருபத்திநான்கு மணி நேரமும் பாடுடடவேண்டியுள்ளதால் கிராமரீதியில் நேர்மையானவர்கள், நீதியானவர்கள் எனக் கணிக்கப்படும் பதினொரு உறுப்பினர்களை தெரிவு செய்துள்ளோம்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கிளிநொச்சி மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் திரு. த. வேலாயுதம் பேசுகையில் கூறியதாவது: 1983ம் ஆண்டிற்குப் பின்பு நிர்வாகம் பல வழிகளிலும் சீர்குலைந்து மக்களுக்கு நீதியின்றி மக்கள் மத்தியில் சிக்கல்கள் தோன்றியுள்ளது. தற்போது விடுதலைப் புலிகளினல் இந்த சமாதான சபை உருவாக்கப்பட்டுள்ளது இதன் மூலம் மக்களுக்கு நீதியை வழங்குமாறு கோருகிறேன் என்றுர்.

புதிய இணக்க சபை நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்; சு. சிவராஜலிங்கம், உபதலைவர்: கிராம சேவையாளர் பொ. யோகேந்திரன், செயலாளர்: பொ. விநாயகமூர்த்தி, உப செயலாளர்; செல்வி மா. மீனலோஜினி. 6 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவானுர்கள். (83

# இளம் விவசாயிகளுக்கு வதிவிடப் பயிற்சி முகாம்

(திருமலை)

வடக்கு - கிழக்கு மாகாண காணி, விவசாய அமைச்சு சர்வோதயத்துடன் இணைந்து இளம் விவசாயிகளுக்கான வதிவிடப் பயிற்சி முகாம் ஒன்றை ஏப்ரல் இருபத்து மூன்றும் திகதி தொடக்கம் மூன்று வாரங்களுக்கு நடாத்தவுள்ளதாக அமைச்சின் பதில் செயலாளர் கலாநிதி என். விக்னராசா தெரிவித்தார்.

உப்புவெளி விவசாயப் பண்ணையிலும் சர்வோதய பணிமனையிலும் இடம்பெறும் இப்பயிற்சி முகாமில் விவசாய உற்பத்தி, கால்நடை வளர்ப்பு சமநல சேவைகள், காணி அபிவிருத்தி நிர்வாகம், வங்கித்துறை, சந்தைப்படுத்தல் ஆகிய விடயய்களில் பயிற்சி அளிக்கப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா நான்கு பேர் மேற்படி பயிற்சி முகாமுக்குத் தெரிவு செய்யப்படவுள்ளார்கள். மாவட்ட மட்டத்திலும் இத்தகைய பயிற்சி முகாம்களை நடாத்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## குரு லிங்க வழிபாடு

(4ம் பக்கத் தொடர்ச்சி)

விதிமுறை தவருது கிரிகைகளைச் செய்வதற்கு சைவக்கு நமார் ஊக்குவிக்கப்படவேண்டும். கௌரவிக்கப்படவேண்டும்.

இருபாலை
சிவஸ்ரீ க.கேதீஸ்வரக்குருக்கள்

## நோன்பு தொழுகை நேர அட்டவணை

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4–36 |
| சுபஹ் | 4–51 |
| சூரிய உதயம் | 6–11 |
| ளுஹர் | 12–20 |
| அஸர் | 3-24 |
| மஃரிப் | 6-21 |
| இஷா | 7-41 |

# வேலைக்குப் போகாததற்கு தாயார் கண்டித்ததால் மகள் தற்கொலை!

(யாழ்ப்பாணம்)

வேலைக்கு செல்லாத மகளை தாயார் கண்டித்ததால் மகள் நச்சுவிதையை சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

யாழ்ப்பாணம் கச்சேரி ல்லூர் வீதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சுபலதா சுப்பிரமணியம் (17 வயது) இளம்பெண்ணே தற்கொலை புரித்தவராவார்.

இதுசம்பந்தமான விசாரணையின்போது தாயார் சாட்சியமளிக்கையில் இறந்த மகள் அருகிலுள்ள கச்சான் கொம்பனிக்கு வேலைக்குச் செல்பவரென்றும். சம்பவ தினம் வேலைக்குச் செல்லாமல் வீட்டிலிருந்ததைப் பார்த்து. வேலைக்குப் போகாமல் சமையலையும் கவனிக்காமல் இப்படிப் படுத்திருந்தால் என்ன முடிவு என்று தான் ஏசியதாகவும் பின் தான் சமைத்து முடித்ததாகவும் சிலமணிநேரத்தின் பிஸ் மகள் வாந்தி எடுப்பதைப் பார்த்து என்ன என்று கேட்க "தான் நச்சுவிதையை சாப்பிட்டதாக மகள் தெரிவித்ததாகவும் கூறிஞர்.

உடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதாகவும் ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைக்குட்படுத்திய சமயம் இரவு அவர் மரணமானதாகவும் மேலும் தெரிவித்தார்,

விசாரணையை மேற்கொண்ட யாழ். திடீர்மரணவிசாரணை அதிகாரிதிரு. எஸ். எஸ். பிரான்சிஸ் விசாரணை முடிவில் தற்கொலை எனத்தீர்ப்பளித்தார்.

விசாரணையின்போது யாழ் ஆஸ்பத்திரிப் பொலிஸ்பகுதி உத்தியோகத்தர் என். இராசசேகரம் சாட்சிகளை நெறிப்படுத்திஞர்.

விசாரணை முடிவில் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (56)

# வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவுச் சபைகள் சமாஜமாக்கப்படும்

(காங்கேசன்துறை)

வடக்கு-கிழக்கு மாகாணங்களிம் இயங்கிவரும் மாவட்டக் கூட்டுறவுச் சபைகளை இணைத்து வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவுச் சபைகளின் சமாஜம் ஒன்றை உருவாகக முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் கூட்டமொன்று யாழ். மணியம்ஸ் கட்டிடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேறிய மற்றும் தீர்மானங்கள் வருமாறு:-

தற்போது மாவட்ட ரீதியில் கூட்டுறவுச் சேவைகள் சுயமாக இயங்க வழிவகுக்கப்பட்டுள்ளதால் கூட்டுறவு நிதியையும், மாவட்ட கூட்டுறவுச் சபைகள் சேகரிக்க வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் அதிகாரம்வழங்க வேண்டும் எனக் கோருதல்.

கூட்டுறவு நிதியிலிருந்து யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை அச்சகம் ஒன்றை நிறுவ 5 லட்சம் ரூபாவை கடனுகத் தருமாறு கோருதல்.

யாழ் வீரசிங்கம் மண்டபத்தைத் திருத்த கூட்டுறவு நிதியிலிருந்து 2 லட்ச ரூபாவை வழங்குமாறு கோருதல்.

மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேறின. (86)

(இன்று சங்கரத்தைப் பத்திரகாளி அம்பாள் கொடியேற்றம்)

## "மகிழ்வெலாம் ஈந்திடுந்தேவி"

சங்கரத்தைப் பதியுறைந்திடுந் தேவி
சஞ்சலங்கள் நீக்கிஅருளுந் தேவி
சங்கத்தமிழ்ப் புலவர்தொழுத தேவி
சங்காரங்கள் புரிந்திடுந் தேவி
குங்குமம் விரும்பிஅணியும் தேவி
குவலயம் போற்றிடுந் தேவி
மங்கையர்போற்றி வணங்குந் தேவி
மகிழ்வெலாம் ஈந்திடுந் தேவி

—சி. சபாநாதன்
சங்கரத்தை.

## "போராட்டத்தில்

# தமிழீழ மக்கள் யாவரும் பங்காளிகளாகமாறவேண்டும்

## — அஞ்சநேயர்

(காங்கேசன்துறை)

"இதுவரை காலமும் எமது சுதந்திரப் போராட்டம் ஓர் குறிப்பிட்ட அளவு விடுதலை வீரர்களாலும், தேசபக்தர்களாலும் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது ஆனுல் இனியும் இதற்கு இடமளிக்காமல் தமிழ் ஈழமக்கள் யாவரும் இப்போராட்டத்தில் பங்காளிகளாக இருந்தால்தான் இப் போராட்டம் வெற்றி பெறும்"

இவ்வாறு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தெற்கு வீதியில் இடம்பெற்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய வலிகாமம் பகுதி அரசியல் அமைப்பாளர் திரு. ஆஞ்சநேயர் கூறிஞர்.

திரு. சி. கணேஷ் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:- "எமது போராட்டம் எமது மக்கள் தலை நிமிர்ந்து வாழ வழி சமைப்பதற்கான போராட்டமாகும். எமது வருங்கால சந்ததி சுதந்திர புருஷர்களாக வாழ வழி வகுக்கும் போராட்டமாகும் போராட்ட அணுகுமுறைகள் மாறினுலும் இறுதி இலட்சியம் தமிழ் ஈழமே என்பதில் நாம் உறுதியாக இருக்கிறேம்.

எமது போராட்டம் ஏற்பட்டிருக்காது விட்டால் எமது இனத்தின் நிலை என்ன? என்பதை சிந்தித்து பார்க்கவேண்டும். சிங்களம் பேசும் மக்களாகவோ, பலமொழி பேசும் கலப்பு இன மக்களாகவோ நாம் மாற வேண்டி ஏற்பட்டிருக்கும்.

இன்று ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைக்கு நாம் சென்றுள்ளோம் தலைவர் பிரபாகரனின் வழி நடத்தலில் எமது இயக்கம் சர்வதேச ரீதியில் மதிப்புப்பெற்று வளர்ச்சியடைந்துள்ளமையினுலேயே ஸ்ரீலங்கா அரசு எம்முடன் சமரசத்துக்கு வரஎண்ணியது. இதன் காரணமாக ஓரளவு சகஜ நிலையும் ஏற்பட்டுள்ளது. இதை வைத்துக்கொண்டு எமக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டதாக மக்கள் நினைப்பது தவறு. எமது சுதந்திரம் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. அது வரை எமது போராட்டம் ஓயாது" என்றுர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர் திரு. க. செல்வநாயகம் பேசுகையில் கூறியதாவது: 'இன்றுள்ள அமைதி நீடிக்கும் என எவரும் கனவு காணக்கூடாது. எமக்கு இன்னமும் பல பிரச்சனைகள் உண்டு. இந்திய - இலங்கை ஒப்பந்த மூலம் சிங்களம் அரசகரும மொழியாக இருக்குமெனவும், தமிழும், ஆங்கிலமும் உடன் அரச கருமமொழிகளாக இருக்குமெனவும் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. சிங்களமும், தமிழும் அரச கரும மொழிகள் என்று இல்லை. மகாபொல பரிசில் பெற்ற தமிழ் மாண

(6ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை

# இலங்கை வங்கிகளில் இன்று நிவாரணம்

(புலோலி)

பருத்தித்துறை, நெல்லியடி இலங்கை வங்கிக் கிளைகளில் இன்று வெள்ளிக்கிழமையும், ஏப்ரல் 1ந் திகதி ஞாயிற்றுக் கிழமையும் மீளக் குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படும்.

இன்று பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் பொலிகண்டி மேற்கு கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 745 குடும்பங்களுக்குத் தலா ஆயிரம் ரூபாய் வீதம் இரண்டாம் கட்ட நிவாரணமும், 7 குடும்பங்களுக்குத் தலா இரண்டாயிரம் ரூபா வீதம் இரு கட்ட நிவாரணமும், கெருடாவில் வடக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 525 குடும்பங்களுக்குத் தலா ஆயிரம் ரூபா வீதம் இரண்டாம் கட்ட நிவாரணமும், ஒரு குடும்பத்துக்கு 2 ஆயிரம் ரூபா வீதம் இரு கட்ட நிவாரணமும், நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையில் வல்வெட்டிக் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 439 குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் இரண்டாம் கட்ட நிவாரணமும் வழங்கப்படும்.

நாளை மறுதினம் ஞாயிறு பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் பருத்தித்துறை கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 294 குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபாய் வீதம் இரண்டாம் கட்ட நிவாரணமும், 24குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் இரு கட்ட நிவாரணமும், நெல்லியடி

(7-ம் பக்கம் பார்க்க)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தினரின் 42வது கருத்தரங்கு நாவலர் வீதியிலுள்ள அவர்களின் பணிமனையில் ஏப்பிரல் 1ம் திகதி இடம் பெறும்.

டாக்டர் (செல்வி) ஆ. நகுலேஸ்வரி "உயர்குருதியமுக்கமும் அதற்கான அக்குபங்சரும் சிகிச்சையும்" என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்தவுள்ளார். (152)

# புதிய நிர்வாகிகள்

(உடுவில்)

சங்குவேலி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. ச சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: பி. ஆர். நடராஜன், செயலாளர்: அ. அரசகுலசேகரன், உபசெயலாளர்: ச. மகிழ்ராஜ், தனாதிகாரி: இ. இந்திரன், உபதலைவர்: நா. தேவராசா, கணக்குப் பரிசோதகர்: செல்வி ஐ. கமலராணி நிர்வாகசபை உறுப்பினர்களாக எட்டுப்பேர் தெரிவுசெய்யப்பட்டனர். [109]

★ ★

(வடமராட்சி)

பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் இவ்வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவிசெய்யப்பட்டனர்.

தலைவர்: எ. ஆர். சிவகுரு, துணைத்தலைவர்: சி. ஜோதிரவி, செயலாளர்: எஸ். கே. இராசேந்திரன், உப-செயலாளர்: கே. குலராசேந்திரன், பொருளாளர்; எஸ். வாமதேவன், துணைப் பொருளாளர்: எஸ். சிவதயாபரம், மைதானச் செயலாளர்: ரி. வரதராசன், கணக்குப் பரிசோதகர்: எஸ். தியாகலிங்கம். (51)

★ ★

(உடுவில்)

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை ஆசிரிய நலன்புரி மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் திரு. திரு. வி. பரிபூரணனந்த சர்மா தலைமையில் நடைபெற்றபோது புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திருமதி ஜெயா விஸ்வலிங்கம், உப தலைவர்: திருமதி பவளம் தியாகராசா, செயலாளர்: திருமதி கனகமணி நடராஜன், பொருளாளர்: திருமதி சொர்ணமலர் சண்முகம் ரட்ணம் கணக்குப் பரிசோதகர் திரு. சு. இராசரட்ணம். [109]

★ ★

(நெல்லியடி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே பிரதேச விளையாட்டாளர் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யபட்டுள்ளனர்.

தலைவர்: ஐயாத்துரை, உபதலைவர்: எஸ். கே. இராசேந்திரம், செயலாளர்: வி. வைரமுத்து. உப-செயலாளர்: கே. கே. முருகவேள். பொருளாளர்: ஏ. என். பாஸ்கரன். (55)

★ ★

(யாழ்ப்பாணம்)

கைதடி நவபுரம் நவ சனசமூகநிலைய நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர்: என். பொன் சபாபதி, தலைவர்: சி இரத்தினம், செயலாளர்: ச. தங்கராசா, பொருளாளர்: சி. பேரம்பலம், உபதலைவர்கள்: சி. வீரராசா, மு சிவராசா, உப செயலாளர்கள்: சி. இராசமோகன், ச. செல்வராசா, உப பொருளாளர்: இ மகாலிங்கம், நாடகமன்றத் தலைவர்; வை. சண்முகநாதன், விளையாட்டுக்குழுத் தலைவர்: சி. மன்மதராசா, செயற்குழு உறுப்பினர்: மு. மாசிலாமணி, கணக்குப் பரிசோதகர்: க. கணேசலிங்கம்.

★ ★

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவின் வருடாந்தப் பொதுக்கூடட்ம், கடந்த 25ந் திகதி சென். பற்றிக்ஸ் கல்லூரி சிமித் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் ஆர். தெய்வேந்திரன், உப தலைவராக சுவர்ணராஜ், செயலாளராக கணேசலிங்கமும், பொருளாளராக ஆர். பாலசுப்பிரமணியமும், நிர்வாகசபை உறுப்பினர்களாக 12 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (56,

★ ★

மன்னார் செஞ்சிலுவைச் சங்கத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் சட்டத்தரணி எஸ் யோன்தாசன், உபதலைவர்: எல். லோகநாதன் செயலாளர்; ஏ. யேம்ஸ், பொருளாளர் எஸ். வி. வேதநாயகம் 9பேர் செயல்குழு உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

★ ★

(பண்டத்தரிப்பு)

யாழ். லங்கா ஆயுர்வேத மாணவர் வைத்தியக் கல்லூரி மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் கல்லூரி உபஅதிபர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகதெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்; கே. சிவராசா, உபதலைவர்: பி. சத்தியானந்தன், செயலாளர்: செல்வி பி. பத்மநாதன், உபசெயலாளர்: செல்வி. வி. சிறிஸ்கந்தராசா, பொருளாளர்: செல்வி எஸ். நமசிவாயம், செயற்குழு உறுப்பினர்களாக ஆறுபேர் தெரிவு செய்யப்பட்டனர். (72)

★ ★

(யாழ்ப்பாணம்)

''சாவகச்சேரி ஏற்றுமதிக் கிராம சிக்கன கடனுதவிக்கூட்டுறவுச் சங்ககூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திருமதி இராஜேஸ்வரி துரைச்சாமி, உபதலைவர்: செல்வி ஆர். புஸ்பமலர், செயலாளர்: வ. திரவியநாயகம், உபசெயலாளர்: செல்வி கே. சுபாஷினி, பொருளாளர்: செல்வி எஸ். சிறீகாந்தரூபி, நிர்வாகசபை உறுப்பினர்கள் திரு. ரி. மகேந்திரம், திரு. கே. தெய்வேந்திரம்பிள்ளை. (54)

★ ★

(யாழ்ப்பாணம்)

கைதடி நுணுவில் ஞானவைரவர் இந்து இளைஞர் மன்றத்தின் வருடாந்தக்கூட்டத்தில் பின்வருவோர் உறுப்பினர்களாகதெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: கு. இராசகுமார், இணைத்தலைவர்; செல்வி த. சரஸ்வதி. செயலாளர்: சி. சி. சுரேஸ்குமார், இணைச்செயலாளர்: செல்வி க. கலாநிதி, பொருளாளர்: செல்வி இ. வரதலட்சுமி நிர்வாகசபை உறுப்பினர்களாக6பேர்தெரிவு செய்யப்பட்டனர்.

★ ★

கைதடி நுணுவில் ஞானவைரவர்ஆலய பரிபாலனசபை புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க அம்பலவாணர், இணைத்தலைவர்: கு. காத்தலிங்கம், செயலாளர்: சி. சிவசுப்பிரமணியம், இணைச்செயலாளர்: சன். காளிதாஸ், பொருளாளர்: இ. துரைசிங்கம், இணைப்பொருளாளர்: வ. பரமசாமி, நிர்வாகசபை உறுப்பினர்களாக 4 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

கைதடி நுணுவில் சனசமூக நிலைய புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: இ. தருமகோகிலம், இணைத்தலைவர்: சண். காளிதாஸ், செயலாளர்: சீ. சிவசுப்பிரமணியம், இணைச்செயலாளர்: செல்வி இ. வரதலட்சுமி, பொருளாளர்: செல்வி த. சரஸ்வதி, நூலகர்: திருமதி ஜெ. பாமா நிர்வாக உறுப்பினர்களாக நால்வர் தெரிவு செய்யப்பட்டன்ர்,

★ ★

நல்லூர் ஸ்ரீ வாலையம்மன் ஆலய பரிபாலன சபையின் பொதுச்சபைக் கூட்டம் நல்லூர் சமூகசேவை மன்றத்தில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டார்கள்

தலைவர்: க. இராசலிங்கம் செயலாளர்; ராஜா ராஜதுரை, பொருளாளர்: நா. சோமசுந்தரம். 7பேர்கொண்ட கமிட்டி உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## காய்கறிவிலை அதிகரிப்பு

(தென்மராட்சி)

சாவச்சேரி, கொடிகாமச் சந்தைகளில் காய்கறி விலை அதிகரித்துள்ளது.

கத்தரிக்காய் கிலோ 20 ரூபா முதல் 24 ரூபாவரை அதிகரித்துள்ளது.

இவ்வாறே இதர காய்கறி வகைகளும் கீரை விலையும் அதிகரித்துள்ளன.

## மூன்று நிலையங்களுக்கு தெளிகருவிகள்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாட்டவத்திலுள்ள நல்லூர், உடுவில் அம்பன் ஆகிய மூன்று கமநலச் சேவை நிலையங்களுக்கு மாமரத்திற்கு கிருமி நாசினி தெளிக்கும் தெளிகருவிகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

இந்த தெளிகருவிகள் கிடைக்காத ஏனைய கமநலச் சேவை நிலையப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு சமீபமாகவுள்ள மேற்படி கமநலச் சேவை நிலையங்களுடன் தொடர்பு கொண்டு இந்த தெளிகருவிகளை வாடகைக்கு பெற்று உபயோகிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (72)

## மூன்றரை லட்சம் ரூபா செலவில்

# தெல்லிப்பழையில் பஸ்தரிப்பு நிலையம்

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழைச் சந்தியில் மூன்றரை லட்ச ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பஸ்தரிப்பு நிலையத்தை விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழைச் சந்தியில் இருந்து நாலாபுறமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் போக்குவரத்துச் செய்வதாலும், அரச அலுவலகங்கள், பிரபல கல்லூரிகள் அமைந்துள்ளதாலும் பொதுமக்கள் மாணவர்கள் தங்கி நின்று தமது பிரயாணத்தைத் தொடர பஸ்தரிப்பு நிலையம் ஒன்று இலலாமை பெரும் குறையாக இருந்து வந்தது.

இதனைக் கருத்தில் கொண்டு 1986ம் ஆண்டு அரச நன்கொடை மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது

பஸ்தரிப்பு நிலையத்திற்கான தளத்திற்கு கல்பரவி தார் ஊற்றி செப்பனிட 1 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவும், பஸ்டஸ்தரிப்பு நிலைய தங்குமடம் அமைக்க 49 ஆயிரத்து 346 ரூபாவும், வடிகால் மேல் மூடிகள் அமைக்க 41 ஆயிரம் ரூபாவும், பஸ்தரிப்பு நிலையத்தைச்சுற்றி மதில் அமைக்க 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டிருந்தது.

கடந்தகால சூழ்நிலைகளால் தடைப்பட்டிருந்த இப்பஸ்தரிப்பு நிலைய வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு துரித கதியில் நடைபெறுகின்றன.

வலி வடக்கு பிரதேச சபை பிரதம தொழில் அத்தியட்சகர் திரு. க. நித்தியானந்தன், தெல்லிப்பழை உப அலுவலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. ஜி. ஜோண்பிள்ளை ஆகியோரது மேற்பார்வையில் இவ் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் இப்பஸ்தரிப்பு நிலையத்தைச்சுற்றி கடைகள் அமைப்பதற்கும், சந்திப் பகுதியை விஸ்தரிப்பதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (86)

# மன்னார் இரவு ரயில் தபால் சேவை ஆரம்பம்

(மன்னார்)

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் தற்சமயம் மன்னாரில் இரவு ரயில் சேவை நடைபெறுவதால் கடந்த 26-ம் திகதி முதல் இரவு ரயிலில் தபால் சேவையும் நடைபெறுகின்றது.

இதனால் மன்னார், எருக்கலம்பிட்டி, பேசாலை, தலைமன்னார், மடு, முருங்கன் போன்ற பெரியதபால் நிலையங்கள் அதிகாலை 6-00 மணிக்கு திறந்து இரவு 8-30 மணிக்கே பூட்டப்படுகின்றன.

பொதுமக்கள் வேலைகள் யாவும் காலை 7-00 மணிக் தொடங்கி மாலை 6-00 மணியுடன் முடிவு பெறும் ஏனைய நேரங்களில் உள்வேலைகள் மட்டும் நடைபெறுகின்றன.

முன்னர் காலையில் 8-00 மணிக்கு தபால் நிலையம் திறந்து மாலை 4-30 மணிக்கே மூடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மானிப்பாய் கிளை நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கிளையில் 1000 ரூபா நிவாரணக் கொடுப்பனவு இல்லாத காரணத்தினால் மேற்படி நிவாரணம்ஆஸ்பத்திரிவீதி இலங்கை வங்கிக் கிளையில் ஏப்பிரல் 1ம் திகதி நவாலி கிராம சேவையாளர் பிரிவிற்கும், ஏப்பிரல் 7ம் திகதி ஆனைக்கோட்டைக்கும் ஏப்பிரல் 8ம் திகதி உயரப்புலம் கிராமசேவையாளர் பிரிவிற்கும் இந்த நிவாரணம் வழங்கப்படும்.

# தொழிற் பயிற்சி நெறி ஆரம்பிக்க முடிவு

(பண்டத்தரிப்பு)

பணிஞகம் கிராமத்தில் கல்வியிலும், பொருளாதார நிலையிலும் மிகவும் பின்தங்கியுள்ள குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதென்று பண்ணுகம் அண்ணு கலை மனறத்தின் 19வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்றத் தலைவர் திரு. க. வே குமரகுரு தலைமையில் அண்மையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிராம மக்களுக்கு பந்தல் சேவை, படங்குச் சேவை ஆகியவற்றை செய்வதுபோல கதிரைகளையும் வாங்கி சேவை செய்வது என்றும், தொழில் இல்லாத இளைஞர்களுக்கு போரூட் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு தொழிற்பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பது என்றும். வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க முயற்சி செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (72)

## புதிய கிளை நிலையங்கள்

(மன்னார்)

மன்னார் பனைவள அபிவிருத்திச்சபையினர் மன்னாரில் புதிய கிளை நிலையங்களை நிறுவ ஏற்பாடுகள் செய்துவருகின்றனர். அண்மையில் மன்னாருக்கு வருகைதந்த பனைவள அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர் திரு. ஏ. திவ்வியராஜா மாவட்டத்தில் பனைவளம் உள்ள இடங்களுக்கு சென்று அங்கே பனைவளத்தைக் கொண்டு உற்பத்தி நிலையங்கள் நிறுவ ஏற்பாடு செய்துள்ளார். இவருடன் மன்னார் பனைவள சபை இணைப்பு அதிகாரி திரு. எம். ஆர். குருஸாம் வந்திருந்தார்.

## இரண்டாம் கட்ட நிவாரணக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் நாளை சனிக்கிழமை திருநெல்வேலி மேற்கு கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 893 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்தல் 2ம் கட்ட நிவாரணம் 1000 ரூபா வழங்கப்படும்.

ஏப்பிரல் மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் மேற்கு கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 1308 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்தல் 2ம் கட்ட நிவாரணம் வழங்கப்படும்.

## தீவுப்பகுதி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வைபவத்தில் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவில் சித்திபெற்றவர்களுக்கு ஆணையாளரினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

திரு. சி. மாணிக்கம், திரு. ப. கனகலிங்கம், டாக்டர் பேரின்பநாதன், திரு சு. யோ. பூராசா உட்படப்பலர் உரையாற்றினார்கள்.

இவ்வைபவத்தில் புங்குடுதீவு படைப்பிரிவின் அத்தியட்சகராக திருமதி சந்தகுமார்-மேரிதிரேசா ஆணையாளரினால் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார். (101)

## போராட்டத்தில்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுக்கு இப்போதும் தனிச்சிங்களத்தில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

ஆகவே போராட்டம் முடிந்து விட்டதாக நாம் நினைக்காமல் எமது போராட்டத்தில் சகல மக்களும் பங்களிப்பு செய்து மேலும் முன்னெடுத்துச் செல்ல வழிவகுக்க வேண்டும் என்றார்.

திரு. ஏ. வி. மாணிக்கம் பேசுகையில் கூறியதாவது:

''நடந்து வந்த பாதையை நாம் சற்று திரும்பிப் பார்த்து அந்த தியாக வரலாறுகளை நினைவு கூர்ந்து நடக்கப் போகும் பாதையில் மனஉறுதியுடன் முன்னேற நாம் தயாராக வேண்டும். வீண் வதந்திகளை நம்பாமல் விடுதலைப் புலிகளுடன் மக்கள் தம்மை இணைத்துக் கொள்ளவேண்டும்'' என்றார்.

மற்றும் ஆசிரியர், திரு. சு. இராஜயநாயகம் திரு. சுந்தரம் உட்பட பலர் பேசினர். (86)

# அக்காவுடன் வாக்குவாதப்பட்ட தங்கை தற்கொலை!

(யாழ்ப்பாணம்)

மூத்த சகோதரியுடன் வாக்குவாதப்பட்டு ஆத்தி மடைந்த தங்கை நச்சுத் திராவகமருந்தி தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த செல்வஜானகி ஐயம்பிள்ளை (16 வயது) இளம் பெண்ணே தற்கொலைசெய்து கொண்டவராவர்.

கி மிநாசினி அருந்தியதை அறிந்து அவசர அவசரமாக யாழ் ஆஸ்பத்திரிக்குகொண்டு வரப்பட்டபோது வழியில் மரணமானார்.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பான மரணவிசாரணையின் போது இறந்தவரின் சகோதரர்கள் சாட்சியமளித்தனர்.

யாழ். திடீர்மரணவிசாரணை அதிகாரி எஸ். எஸ் பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார். யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ்பகுதி உத்தியோகத்தர் என். இராசசேகரம் சாட்சிகளை நெறிப்படுத்தினார்.

விசாரணை முடிவில் சடலம் சகோதரரிடம் ஒப்படைக்கப்பட்டது, (56)

## பருத்தித்துறை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வங்கிக் கிளையில் துன்னாலைகிழக்கு கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 659 குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் இரண்டாம் கட்ட நிவாரணமும் வழங்கப்படும் (61)

## குருபூசை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மாகும்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எஸ். விநாயகமூர்த்தியின் சிறப்புச் சொற்பொழிவும், இசைமணி திரு. ஆனந்தசிவத்தின் பண்ணிசைச் கச்சேரியும் இடம் பெறும். (152)

## பம்பாய்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

ஒரு கிலோ பம்பாய் விதை வெங்காயத்தை 425 ரூபாவுக்கு விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த விதையை பெறவிரும்பும் விவசாயிகள் அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு. எஸ். குகராசாவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (72)

## சந்தைப்பகுதி

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இச் சந்தையின் சுற்றாடலில் கழிவுப் பொருட்கள் வீசப்படுவதாலும், கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாலும் சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படுவதாக மக்கள் புகார் கூறுகின்றனர்.

இங்கு வீசும் துர்நாற்றம் அருகில் வாழும் பொதுமக்களையும் பெரிதும் பாதிப்பதாகக் கூறப்படுகிறது. (86)

## யாழ்.நகரில் மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் விளையாட்டுக் கழகங்களிடையே வருடாந்தம் நடத்தப்படும் மெய்வல்லுநர் போட்டி நாளை சனியும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி விளையாட்டுப் போட்டிக்கு யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு. கே சண்முகநாதன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்கின்றார். (வி)

0 0

## கலைமகள் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

''இவ் விழாவில் மெய்வல்லுநர்களின் பேராற்றல்களைப் பார்த்தபோது, இந்த தசாப்தம் முடிய அடுத்து வரும் 21-ம் நூற்றாண்டில் எமது மாணவர்கள் உலக அரங்குகளில் எதிர்மன்னசிங்கம் போன்று சாதனைகளைப் புரிவார்கள் எனத் தோன்றுகிறது''

இவ்வாறு கொத்தணி அதிபர் அ பஞ்சலிங்கம் கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் சிறப்புரையாற்றியபோது கூறினார்.

கலைமகள் இல்லம் முதலாம் இடத்தையும், திருமகள் இல்லம் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

## மன்னாரில் சிறிலங்கா ஹெலி

(மன்னார்)

நீண்டநாள் இடைவெளிக்குப் பின்னர் மன்னார் நகரத்தில் சிறிலங்கா கெலி மிகவும் தாழ்வாக பறந்து சென்றது.

இதே வேளையில் ரோந்து நடவடிக்கையில் முன்னர் ஈடுபட்ட கடல் விமானம் தற்சமயம் தனது வழக்கமான சேவையை தலைமன்னார் வடகடல் தென்கடலில் செய்து வருகின்றது.

## முதலிடம்

(புலோலி)

வடமராட்சி கோட்டக் கல்விப் பிரிவுள்ள எட்டு கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையே மெல்வல்லுநர் போட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் பருத்தித்துறை கொத்தணி முதலிடத்தையும், நெல்லியடி கொத்தணி இரண்டாம் இடத்தையும், உடுப்பிட்டி கொத்தணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (61)

# காணித் தகராறில் வயோதிபர் பலி!

(யாழ்ப்பாணம்)

புளியம்பழம் உதிர்த்திய போது ஏற்பட்ட காணித்தகராறில் கிறிஸ் கத்தியால் குத்தப்பட்ட வயோதிபர், யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். தெல்லிப்பளை கிழக்கில் நடந்த இச்சம்பவத்தில் துரையப்பா கனகசுந்தரராசா (வயது 63) என்பவரே மரணமானவராவர்.

மரண விசாரணையை பதில் நீதிபதி அன்ரனி நடத்தினார்.

காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்ட் தி. சபாரத்தினம் சாட்சிகளை நெறிப்படுத்தினார்.

விசாரணையின் முடிவில் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (56)

# "நொக்கவுட்" போட்டியில் பாடும்மீன் கழகம் சாம்பியனாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

'யாழ் உதைபந்தாட்ட லீக்' விளையாட்டுக் கழகங்களிடையே நடத்திவந்த உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியில் குருநகர் 'பாடும்மீன்' விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

'பாடும்மீன்' விளையாட்டுக் கழகத்துக்கும் - 'யாழ், முஸ்லிம்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நேற்று முன்தினம் சாம்பியன் மோதல் நடைபெற்றது. இப்போட்டி ஆரம்பமாவதற்கு முன் இரு கழக வீரர்களு ,பிரதம அதிதி டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப்புக்கு காரியதரிசி ஈ. கே. குமரையாவினாலும், போட்டிக் குழுத் தலைவர் ஏ. செபஸ்தியாம்பிள்ளையாலும் அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர்.

இப்போட்டி, ஆரம்பமாகி முடிவடையும்வரை இரு கோஷ்டிகளும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் மோதியபோதும், இரு சாராரும் பல இலகுவான கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டுவிட்டனர்.

இடைவேளையின் பின்பு ஆட்டம் முடிவடைவதற்கு 15 நிமிடங்கள் இருக்கும் போது 'பாடும்மீன்' கழகம் ஒரு கோலைப்போட்டது. இதன் பின்பு ஆட்டம் சூடுபிடித்த போதும் முஸ்லிம் கழகத்தால கோல்களைப் போட முடியாதபடி பாடும்மீன் கழகப் பின்னணி வீரர்கள் தடுத்துவிட்டனர். ஈற்றில் பாடும்மீன் கழகம் 1—0 கோலால் வெற்றி பெற்றது.

பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதாளத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. எஸ். அன்ரனிப்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (வி)

## இலங்கை வங்கி நிவாரணக் கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

மீளக்குடியமர்த்தல் நிவாரணம் மிகுதி 1000 ரூபாவுக்கான கொடுப்பனவுகள், காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையில் மல்லாகம் வடக்கு, அளவெட்டி தெற்கு ஆகிய கிராமசேவகர் பிரிவுகளுக்கு ஏப்ரல் 1ம் திகதி கொடுக்கப்படும்.

நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையில் துன்னாலை தெற்கு கிராம சேவகர் பிரிவுக்கும் ஏப்ரல் 1ம் திகதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்து. (152)

## வெற்றி தோல்வி இல்லை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய கிரிக்கெட் குழுவுக்கும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் கிரிக்கெட் குழுவுக் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட்போட்டி ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. கிரிக்கட் வீரர் திரு. எஸ். நடராஜசுந்தரம் மத்தியஸ்தராக கடமையாற்றினார். ஹாட்லி பழைய மாணவர்குழுவில் விளையாடிய செல்வன் எஸ். குலஇந்திரன் முன்னணியில் விளையாடி 51 ஓட்டங்களைப் பெற்றார். வேலாயுதம் மகாவித்தியாலய குழுவின் தலைவர் செல்வன் யோகன் 31 ஓட்டங்களைப் பெற்றார். (52)

# 'ஈழகேசரி' பொன்னையா நினைவுநாள் விழா

(யாழ்ப்பாணம்)

'ஈழகேசரி' நா. பொன்னையா நினைவுநாள் விழா குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் ஏப்ரல் 1ம் திகதி காலை நடைபெறும்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. கி. சிவானந்தன் ஆரம்ப உரை நிகழ்த்துவார். சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் 'ஈழத்தில் அச்சுக்கலையும் குரும்பசிட்டியும்' என்னும் தலைப்பில் நினைவுநாள் உரை நிகழ்த்துவார்.

திருமகள் அழுத்தகத்தில் அரை நூற்றாண்டுக்கு மேலாகக் கடமையாற்றிய திருவாளர்கள் மு. சபாரத்தினம், செ. சின்னத்துரை, ஆ. முத்தையா ஆகியோரை யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் கௌரவிப்பார்.

விழாவில் சு. வேலுப்பிள்ளை, ஆசிரியமணி பஞ்சாட்சரம், மயிலங்கூடலூர் நடராசன் ஆகியோர் பாராட்டுரை வழங்கவிருக்கிறார்கள். (152)

# 'பயிலுநர் ஆசிரியர்களுக்கும் சகல உரிமைகளும் வழங்க வேண்டும்'

(மருதங்கேணி)

''புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட 25 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் ஏனைய ஆசிரியர்களைப் போன்று உரிமைகளும், சலுகைகளும் வழங்கப்பட வேண்டும்''.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் கிளிநொச்சியில் ஆரம்பமான இரண்டு நாள் ''கஷ்டப் பிரதேச ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்'' என்ற விடயம் சம்பந்தமான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்கச் சம்மேளனம், பிரெடரிக் ஈபேர்ட் மன்றம், அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியவை இணைந்து நடத்திய இரண்டு நாள் கருத்தரங்கு, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைத் தலைவர் திரு. மு. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

கருத்தரங்கின் ஆரம்பத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிதிச் செயலாளர் திரு. நா. சோதிநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. த. மகாசிவம் தொடர்ந்து உரையாற்றும்போது. ''சம்பளம், லீவு உட்பட சகல உரிமைகளும், சலுகைகளும் ஏனைய ஆசிரியர்களைப் போன்றதாக பயிலுநர் ஆசிரியர்களுக்கும் இருத்தல்வேண்டும்.

பயிலுநர் ஆசிரியர் தெரிவில் தவறுகள் நடந்திருக்கலாம். எனினும் நியமனங்கள் முடிந்த பின்னர் அதனைப் பற்றிப் பேசிப் பயனில்லை. ஆசிரிய குடும்பத்தில் சேர்ந்துள்ள அவ்வாசிரியர்களை, அதிபர், ஏனைய சிரேஷ்ட ஆசிரியர்கள் திறமைசாலிகளாக மாற்றியமைத்தல்வேண்டும்' என்றார்.

முதல்நாள் கருத்தரங்கிற்கு பிரதம விருந்தினராக, கிளிநொச்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். தனஞ்செயன் கலந்து கொண்டார்.

மறைந்த போராளிகளுக்கும அன்னை பூபதிக்கும் இரண்டுநிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (53)

## திருநகரில் உண்ணாவிரதம்

(கிளிநொச்சி)

திருநகர் அன்னை பூபதி அரங்கில் இடைவிடாத உண்ணாவிரதத்தை திருநகரைச் சேர்ந்த மயில்வாகனம் பாக்கியநாதன் மேற்கொண்டுள்ளார். இன்றுடன் இவர் நான்காவது நாளாக அன்னை பூபதி கணபதிப்பிள்ளை நினைவாக உண்ணாவிரதத்தை அனுஷ்டிக்கிறார். இவ் அரங்கில் சுழற்சி முறையிலான உண்ணாவிரதமும் இடம்பெற்றுவருகிறது. (83)

## தமிழ்த்தின போட்டி

(யாழ்ப்பாணம்)

''முச்சங்கம் கண்டது எங்கள் தமிழ், இயல் உடையது, இசையுடையது; இனிய கூற்றுடையது எங்கள் தமிழ் என்றெல்லாம் இன்று பெருமை கொள்ளும் நாம் அமிழ்தினும் இனிய இத்தமிழ் மொழியை முறையாகப் பயின்று வளர்க்க வேண்டும். எமது மக்கள் இன்புற்று வாழவேண்டுமாயின் தாய்மொழியாகிய தமிழ் மொழியைப் பிழையின்றிப் பேசவும். எழுதவும் பயின்று தம் கருத்துக்களைத் துணிவுடன் பிழையின்றி வெளிப்படுத்தல்வேண்டும். மாணவர்கள் தமிழ் அறிவு படைத்தவர்களாய்த் திகழவேண்டும் என்னும் அரிய நோக்கத்தோடு நடாத்தப்படுவதே தமிழ் மொழித்தினமாகும்.

இவ்வாறு கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ் மொழித் தினப் போட்டிகளை ஆரம்பித்துவைத்த அதிபர் கா. கணேசதாசன் உரையாற்றினார்.

ஆரம்பப் பிரிவுப் போட்டிகள் ஆசிரியை திருமதி பு. இராஜேந்திரன் தலைமையிலும் கனிஷ்ட பிரிவுப் போட்டிகள் திருமதி சோ. மகாலிங்கம் தலைமையிலும் உயர் பிரிவுப் போட்டிகள் திருமதி சி. பற்பநாதன் தலைமையிலும் நடைபெற்றன. முதலிடம் பெற்ற மாணவர்கள் கொக்குவில் கொத்தணித் தமிழ்த் தினப் போட்டிக்கு பங்குபற்ற தகுதி பெற்றனர்.

## புலிகளின் பொதுக் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் கூட்டங்கள் கோண்டாவிலில் நாளை இரவு 7 மணிக்கும், புன்னாலைக்கட்டுவனில் ஏப்ரல் 1ம் திகதி இரவு 7 மணிக்கும் உரும்பராயில் ஏப்ரல் 2ம் திகதி இரவு 7 மணிக்கும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ஏப்ரல் 1ம் திகதி மாலை 5 மணிக்கு அன்னை பூபதியின் அஞ்சலிக்கூட்டம் யாழ். இந்துககல்லூரியிலும் நடைபெறும். (152)

## கருத்தரங்கு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் உள்ள நாகர்கோவில், உடுத்துறை ஆகிய இரண்டு கொத்தணியில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு உடற்கல்வி சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று யாழ் கல்வித் திணைக்களத்தில் வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு பாடசாலைகளில் இருந்தும் இரண்டு ஆசிரியர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள். (53)

## அரச முத்திரையிடப்பட்ட நிறுவைகளையும், கொள்ளளவுகளையுமே வியாபாரிகள் வாங்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

மெட்ரிக் நிறுவைகள், மெட்ரிக் திரவ கொள்ளளவு ஆகியன அரச முத்திரையிடப் பட்டுள்ளனவா என்பதைக் கவனித்தே வியாபாரிகள் இக் கருவிகளை வாங்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது,

வியாபாரிகள் புதிதாக வாங்கும் எண்ணெய் அளவுகருவிகளில் அனேகமானவை போலியானவையும், அளவைகள் குறைவானவையாகவும் உள்ளன என்றும், இவை சட்ட விரோதமான சருவிகள் என்றும் யாழ் மாவட்ட நிறுவைகள் அளவைகள் திணைக்களப் பரிசோதகர் திரு. கா. நாகலிங்கம் அறிவித்துள்ளார்.

அரசாங்க முத்திரையிட்ட திரவ அளவைகள் அளக்கும் கருவிகளை அனுமதி வழங்கப் படாதவர்கள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. என்றும் உரிய அளவுகளுக்குச் சில விதிமுறைகள் உள்ளன என்றும், நிறுவைகள், அளவைகள் திணைக்கள அனுமதிபெற்றவர்கள் மாத்திரமே முத்திரையிட்ட கருவிகளை வாங்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். (54)

## கிளிநொச்சியில் அடகு நகைகள் மீளளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலும் அடகு நகைகளை மீளப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் வங்கியில் முன்னர் பணம் செலுத்தியவர்களது நகைகள் கிளிநொச்சி தபால் நிலையத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் கரும பீடத்தில் வைத்து விநியோகிக்கப் படவுள்ளன.

பரந்தன் கிளையில் 1989 செப்டம்பர் 27-ம் திகதிவரை பணம் செலுத்தியவர்களுக்கு ஏப்ரல் 2-ம, 3-ம் திகதிகளிலும், கிளிநொச்சிக் கிளையில் 1989 யூன் 23 வரை பணம் செலுத்தியவர்களுக்கு ஏப்ரல் 4-ம் திகதியும் நகைகள் விநியோகிக்கப்படும் என மக்கள் வங்கியின் யாழ் பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார். (பூ)

## துணைவேந்தர் நல நிதியிலிருந்து 75 வறிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்க ஏற்பாடு

(உடுவில்)

மகாபொல புலமைப் பரிசில் கிடைக்காத யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எழுபத்தைந்து வறிய மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா முன்வந்துள்ளார்.

துணைவேந்தர் நலநிதியத்தில் இருந்து இப்புலமைப் பரிசில் வழங்கப்பட உள்ளது.

துணைவேந்தர் நலநிதியத்துக்கு இதுவரை சுமார் 25 லட்சம் ரூபா நிதி சேர்ந்திருப்பதாகவும், மேலும் நிதி உதவி வழங்குமாறும் துணைவேந்தர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

துணைவேந்தர் நலநிதியம் என பெயரிட்டு பொது மக்கள் நிதியினை யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார். (109)

### இன்று புதிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்படவில்லைஎன்று தெரியவருகிறது

இன்று நண்பகலுக்குப் பின்னர் இந்த அமைச்சரவை அறிவிக்கப்படலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

புதிய அமைச்சரவை அறிவிப்பிற்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா சுபமுகூர்த்தம் பார்த்துக்கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இப்புதிய அமைச்சரவை பட்டியலிலிருந்து அமைச்சர் காமினி திசநாயக்கா ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இன்று ஜீ. சி. ஈ. பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஜீ. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சை இன்று ஆரம்பமாகிறது ஏப்ரல் 7ம் திகதி முடிவடையும் இப்பரீட்சை யாழ். மாவட்டத்தில் 171 பரீட்சை நிலையங்களில் நடைபெறுகின்றது.

### வல்வை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

த்தநடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாகவும் கூறப்பட்டது

இவர்கள் அனைவரும் இன்று வெள்ளிக்கிழமை மாலைக்குள் முற்றாக வெளியேறிவிடுவார்கள் என்றும்வல்வை இராணுவ முகாம் உயர் அதிகாரி தெரிவித்தார்.

அதற்குமுன் பொதுமக்களின் உடமைகள் பொதுமக்களிடமும் சிதம்பரக் கல்லூரி விளையாட்டுமைதானம் போன்றவைகள் கல்லூரி நிர்வாகத்திடமும் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்படும்.

இதேபோல தற்போது மக்கள் குடியிருப்பில் இருந்து வரும் பொலிஸ் நிலையமும் இடமாறும் எனத் தெரியவருகின்றது. (51)

## 2-ம் கட்ட நிவாரணம்

(காங்கேசன்துறை)

வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக் குடியமர்த்தல் நிவாரணத்தில் இரண்டாம் கட்ட ஆயிரம் ரூபாய் காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையில் வழங்கப்பட்டு வருகிறது.

இன்று 31-ம் திகதி முதல் நிவாரணம் வழங்கப்படவுள்ள பகுதிகள் வருமாறு:

இன்று தெல்லிப்பழை கிழக்கு, பயிலிட்டித்துறை, 1-ம் திகதி துர்க்காபுரம் கொல்லங்கலட்டி, 2-ம் திகதி மாவிட்டபுரம், 3-ம் திகதி காங்கேசன் துறை வடக்கு, 4-ம் திகதி காங்கேசன்துறைதெற்கு, 5-ம் திகதி வசாவிளான், 6-ம் திகதி மயிலிட்டி வடக்கு, 7-ம் திகதி தையிட்டி, 8-ம் திகதி பலாலி கிழக்கு. (86)

## நெடுந்தீவு படகுச் சேவை ரத்தானதால் பிரயாணிகள் அவதி

(நெடுந்தீவு)

குறிகாட்டுவானில் காலையில் தொடங்கும் நெடுந்தீவுப் படகுச் சேவைதற்போது இல்லாத காரணத்தால் நெடுந்தீவுப்பிரயாணிகள்கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றனர்.

நெடுந்தீவுப் பிரதேசசபை மேற்படி சேவையை மேற்கொண்டு வந்தது. திடீரென இச்சேவை நிறுத்தப்படவே அதை நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் மேற்கொண்டு வந்தது. இப்பொழுது அச்சேவையும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட இச்சேவையின் தொடர்புக்கு வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் யாழ்ப்பாண சாலையும், கிளிநொச்சி சாலையும் மேலதிகம்பருந்து சேவையையும் அப்போது ஈடுபடுத்தியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (133)

### தமிழ்ப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களிடம் தங்களது இலங்கை விஜயம் குறித்து இக்குழுவினர் தெரிவித்துள்ளார். இம் மாநாட்டில் திரு. திலகர் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக்குழு, கடந்த 32 மாதங்களில் வடக்கு-கிழக்கில் இந்தியப் படையினர் மேற்கொண்ட மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் குறித்து ஐ. நா. மனித உரிமைகள் சுழகத்திற்கு விரிவான அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளது.

இது தொடர்பாக வடக்கு-கிழக்கு பகுதிக்கு நேரடி விஜயம் மேற்கொள்ளுமாறும் அங்கு கோரிக்கை விடப்பட்டது. இதனை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### புலிகளி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ருந்து புதுடில்லி வந்தடைந்த போது இடம்பெற்றவரவேற்பு வைபவத்தில் சலந்துகொண்டு உரையாற்றுகையில் ஜெனரல் கல்கத் இவ்வாறு கண்டனம் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்; இலங்கையில் இனப்பிரச்னையை தீர்த்து வைப்பதில் இனிமேலும் இந்திய இராணுவம் தலையிடமாட்டாது, இராணுவப்பணி தற்போது பூர்த்தியடைந்து விடடது. இதில சந்தேகம் எதுவுமில்லை.

அரசியல் சார்புடைய இப் பிரச்னையில் இராணுவத்திறகு எதுவித சம்பந்தமுமில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் படைபலத்தை 'றோ' குறைவாக மேற்கொண்ட கணிப்பு பெரும் தவறாகிவிட்டதென்றும் 'றோ' மீது குற்றம் சுமத்தினார்.

இவ்வரவேற்பு வைபவத்தில் பிரதமர் திரு. வி. பி. சிங் சுலந்துகொண்டு படையினரின் நடவடிக்கைக்கு பாராட்டுத் தெரிவித்தார். மேலும் தமிழ்மக்களின் பாதுகாப்பிற்கு ஜனாதிபதி பிரேமதாசா உத்தரவாதமளித்துள்ளதாகவும் திரு. சிங் கூறினார். (சி)

### ஒரிஸா தமிழ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கியுள்ள 90,000 அகதிகளும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

### பலத்த வாக்குவாதம்

இதேவேளை நேற்று ராஜ்ய சபாவில் இலங்கையில் இந்தியப்படையினரின் நடவடிக்கை தொடர்பாக தி மு க. உறுப்பினர்களுக்கும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களுக்குமிடையில் பெரும் வாக்குவாதம் இடம்பெற்றது. இந்தியப்படையின் நடவடிக்கையை தி மு. க. உறுப்பினர் சண்டித்தும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆதரித்தும் வாக்குவாதப்பட்டனர். (சி)

### தமிழகத்தின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் நாகபட்டினத்தில் இருந்து மீன்பிடிப்பதற்காக 53 படகுகளில் சென்ற கடற்றொழிலாளர்கள்நேற்றுவரைவீடுதிரும்பவில்லை என்றுதமிழக முதல்வர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

### சட்டப்பேரவையில் கலைஞர்

சட்டப்பேரவையில் நேற்று எழுப்பப்பட்ட கேள்வியொன்றிற்கு பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு கூறினார்.

''எனக்கு கிடைத்த தகவலின்படி நாகபட்டினத்திலுள்ள இருகிராமங்களிலிருந்து 61 படகுகளில் மீன்பிடிப்பதற்கு கடற்றொழிலாளர்கள் சென்றதாகவும் இதில் எட்டுப்படகுகளில் சென்றவர்கள் மட்டும திருப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 53 படகுகளையும் ஆட்களுடன் சேர்த்து இனந்தெரியாதவர்கள் கடத்திச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது'' என்றும் அவர் கூறினார்!

இது பற்றி மேலதிக விசாரணைகளை நடத்துமாறு பொலிஸார் பணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (து)

### தமிழீழ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும்.

இவற்றில் காணும் முன்னேற்ற நடவடிக்கைகளை அடுத்து புதிய உடன்பாடு கைசாத்திடப்படலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### விசேடபஸ்ரயில்சேவை

(கொழும்பு)

எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இலங்கை போக்குவரத்துச்சபை, ரயில் சேவை, தனியார் பஸ் சேவை அனைத்தும் மக்களுக்கு விசேட போக்குவரத்து வசதிகளைச் செய்யவிருக்கின்றன.

ஏப்பிரல் 3-ம் திகதி முதல் 30-ம் திகதிவரை புதிய சேவைகள் வழங்கப்படவுள்ளன.

### சமாதான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு முடிவு எடுத்திருப்பதாக திருமலை செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கிழக்குமாகாண தூதுக்குழுவினருக்கும் மத்திய அரசின் உயர்மட்ட அதிகாரிகளுக்குமிடையே திருமலைச் செயலகத்தில் இடம்பெற்ற நீண்ட பேச்சுவார்த்தையை அடுத்து சமாதான சபைகள் அமைக்கமுடிவுஎடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் வன்செயல்களின் போது இடம்பெயர்ந்த மக்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களைத் தத்தமது இருப்பிடங்களுக்கு மீளக்குடியமர்த்துவதிலும் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

கிழக்கு மாகாணத்தில் அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் ஒவ்வொரு அகதிக்கும் தலா 36,000 ரூபா நிவாரணப் பணமாக வழங்கப்படவிருப்பதாக திருமலை அரசாங்க அதிபர் திரு. கே. பி. விஜயக்கோன் தெரிவித்துள்ளார். (அ)

### புலிகளுக்கும்

(1ம் பக்கத்தொடர்ச்சி)

★ கடற்பிரதேசத்தில் ரோந்து சேவையில் ஈடுபடும் கடற்படையினர் பின்பறற வேண்டிய நடைமுறைகள்.

★ யாழ்ப்பாணத்துக்கான தொலைதொடர்பு வசதிகளை மீண்டும் ஏற்படுத்தல்.

★ வன்செயல்களின்போது சேதமாக்கப்பட்ட உடமைகளுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்குதல்.

★ தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் அரச சட்ட அமுலாக்கல் குழுவுக்கும் இடையே புரிந்துணர்வை நிலைநாட்டுதல (அ)

## மரண அறிவித்தல்

### முருகேசு வைரமுத்து



அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாய் தெற்கில் வசித்தவருமான மு. வைரமுத்து J. P. [முன்னைநாள் சி. சி எஸ்] காலமாகிவிட்டார். இவர் திருமதி பூ மகாலட்சுமியின் அன்புக்கணவரும், திருவாளர்கள் சிவகுமார், வரதகுமார், நிருந்ததமார் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் 31-03-90 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்வார்களாக.

'குமரபுரம்'
லோட்டன் வீதி,
மானிப்பாய்

தகவல்:
மனைவி. மக்கள்.

[சி 649]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி. 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.